**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் தைத் திங்கள் 07–ம் நாள்
2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 21–ம் நாள் புதன்கிழமை

******

**அசல் வழக்கு எண். 78/2011–ல் இடைமனு எண்.08/2025**

1. ரவி (வழக்கிற்கு பிறகு இறந்தார்)
2. லெட்சுமணன்
3. குமார்
4. வசந்தா (இறந்தார்)
5. கலைவாணி
6. மைனர் தையல்நாயகி
   சார்பாக அவரின் கார்டியனும்
   தாயாருமான 5ம் வாதி மூலமாக
7. பாலமுருகன்
8. சுமதி
9. ராஜா
10. கண்ணன்
11. மாலதி .....மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்....

சுசீலா ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 09.01.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.01.21 18:28:15 +0530

**உத்தரவு**

அசல் வழக்கில் ஆணவங்கள் குறியீடு செய்ய வேண்டி, வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள 3ம் வாதியை Recall செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/3ம் வாதியால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 18 விதி 17-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் 3ம் வாதி ஆவார். அசல் வழக்கானது 1 முதல் 11 மனுதாரர்கள்/வாதிகளால், எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்குத் தொடர்ந்து விசாரணைக்கு வந்து, வா.சா.1 விசாரணை முடிந்து வாதி தரப்பு சாட்சிக்காக கெடு போடப்பட்டிருந்த நிலையில், இம்மனுவானது, ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி, வா.சா.1 ஐ Recall செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால்/3ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரர்/3ம் வாதிக்கு ஏராள நஷ்டமும் கஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே வா.சா.1 ஆன மனுதாரர்/3ம் வாதியை Recall செய்து உத்தரவிடக்கோரி அவரது தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** .

இந்த வழக்கில் PW1 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பிறகு, அந்த கேள்விகளுக்கு தக்கபடி இந்த மனு தாக்கல் செய்திருப்பது ஏற்க கூடியதல்ல என்றும், மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் உண்மைத்தன்மை, ஏற்றுக்கொள்ளும் தன்மை, செல்லுபடிதன்மை ஆகியவற்றை வாதிகள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளதாகவும், ஆவணங்கள் தாவா சொத்திற்கு தொடர்புடைய ஆவணங்கள் கிடையாது என்றும், ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணங்களை மனுதாரர்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.01.21 18:28:21 +0530

அபிடவிட்டில் தெளிவாக கூறவில்லை என்றும், PW1ஐ குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டதால், PW1ஐ recall செய்ய இயலாது என்றும், ஆவணங்களை ஏற்று கொள்ளவும் இயலாது என்றும், எனவே இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

3. மனுதாரர்/3ம் வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/3ம் வாதி மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>5. தீர்வு:</u>

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது 1 முதல் 11 மனுதாரர்கள்/வாதிகளால், எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 24.10.2025ல் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், இம்மனுவானது அசல் வழக்கில் ஆணவங்கள் குறியீடு செய்ய வேண்டி, வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள 3ம் மனுதாரர்/3ம் வாதியை Recall செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/3ம் வாதியால் உ.வி.மு.ச. கட்டளை 18 விதி 17–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் PW1 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பிறகு, விடுபட்ட இடத்தை நிரப்புவதற்கு தக்கபடி இந்த மனு தாக்கல் செய்திருப்பதால் ஏற்க கூடியதல்ல என்றும், மனுவுடன் தாக்கல்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.01.21 18:28:29 +0530

செய்துள்ள ஆவணத்தின் உண்மைத்தன்மை, ஏற்றுக்கொள்ளும் தன்மை, செல்லுபடிதன்மை ஆகியவற்றை வாதிகள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளதாகவும், ஆவணங்கள் தாவா சொத்திற்கு தொடர்புடைய ஆவணங்கள் கிடையாது என்றும், ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணங்களை மனுதாரர் அபிடவிட்டில் தெளிவாக கூறவில்லை என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு வாதிடப்பட்டது.

(ii) அசல் வழக்கில் வா.சா.1 குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சிய விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இருப்பினும், வா.சா.1 ஐ Recall செய்வதற்கு மனுதாரர்/3ம் வாதி தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும், மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு உரிய வாய்ப்பு இருப்பதாலும், தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியில்,** மனுதாரர்கள்/வாதிகள் செலவுத்தொகையாக ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு வரும் 29.01.2026ம் தேதிக்குள் கொடுக்கும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. **அழைக்க –** 30.01.2026



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.01.21 18:28:34 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.01.21 18:28:40 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.01.21 18:28:50 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு உத்தரவு</u>**
அசல் வழக்கு எண்.78/2011ல்
இடைமனு எண்.08/2025
நாள் 21.01.2025